திரு. துரைமுருகன்: *தாங்கள் இந்தச் சபையை நடத்தி, இந்தச் சபையின் term முடிகிறபொழுது, எப்படி முன்னாள் முதலமைச்சர் உங்களைப் பாராட்டினாரோ, அப்படி நீதி தவறாமல், எங்களுக்கு நியாயம் வழங்கி, நாங்கள் பாராட்டுகிற அளவிற்கு நீங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து உங்களுக்கு * வேண்டுகோள் விடுக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

3. கவன ஈர்ப்பு

(அ) கொளத்தூர் தொகுதி, மின் விபத்தில் உயிரிழந்த திருமதி A. சந்திரா குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) அது முடிந்துபோய்விட்டது. அதை விட்டுவிடுங்கள். அது வேண்டாம், வேண்டாம், முடிந்துபோய்விட்டது. விட்டுவிடுங்கள். மாண்புமிகு அமைச்சர் அதை வற்புறுத்த வேண்டாம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொளத்தூர் தொகுதியைச் (குறுக்கீடுகள்) சார்ந்த திருமதி A. சந்திரா 13–3–2017 அன்று மின் விபத்தில் உயிரிழந்தது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*